# பாடம் 31: திருமுழுக்கு

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (8 வயது) | : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (11 வயது) | : 1 முதல் 12 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (14 வயது) | : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
கடந்த பாடத்தில், இயேசு கிறிஸ்துவால் தமது மணவாட்டிக்காக நிறுவப்பட்ட ஏழு அருளடையாளங்களைக் கத்தோலிக்கத் திருச்சபை கொண்டுள்ளது என்பதை நாம் கற்றோம். இந்த பாடத்தில், ஒவ்வொரு நம்பிக்கையாளரும் கிறிஸ்துவின் உடலின் உறுப்பாவதற்கு பெற வேண்டிய முதல் அருளடையாளம் பற்றி நாம் கற்போம்: திருமுழுக்கு.

**தற்போதைய பாடம்:**

1. "திருமுழுக்கு என்றத் தமிழ்ச் சொல்லானது பாப்திசோ என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வருகிறது, அதற்கு "அமிழ்த்தல், மூழ்குவித்தல், கீழே செல்லுதல்" என்று பொருள்.

2. இது மத்தேயு 28:19-20ல் இயேசு தந்த கட்டளை: "எனவே, நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள். நான் உங்களுக்கு வழங்கிய கட்டளைகள் எல்லாவற்றையும் கடைபிடிக்குமாறு அவர்களுக்கு கற்பியுங்கள்."

3. யோவான் 3:5ல், மீட்புக்கு திருமுழுக்கு அவசியம் என நிக்கதேமிடம் இயேசு சொல்கிறார்: "உண்மையாக, உண்மையாக நான் உமக்குச் சொல்கிறேன், ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி, அவர் கடவுளின் அரசுக்குள் நுழைய இயலாது."

4. தண்ணீரைத் தெளித்தோ, ஊற்றியோ, அல்லது அதில் மூழ்குவித்தோ திருமுழுக்கு வழங்கலாம். அது கிறிஸ்துவுடனான நமது இறப்பையும் (அடக்கம் செய்யப்பட்டதையும்), தொடர்ந்து, அவருடனான உயிர்ப்பையும் குறித்துக் காட்டுகிறது. கிறிஸ்து நமக்காகச் செய்ததைப் போன்று, அவரது பாடுகள் மற்றும் பலியைத் தழுவி, திருமுழுக்கில் நாமும் அவரோடு இறக்கிறோம்.

5. கத்தோலிக்கத் திருச்சபையின் பெரும்பாலான மக்கள் தங்களது திருமுழுக்கை நினைவில் கொண்டிருப்பதில்லை, ஏனெனில் அவர்கள் மழலைகளாக இருக்கும்போதே திருமுழுக்கு பெற்றுவிட்டனர்.

6. திருமுழுக்கின் விளைவுகள்:
அ) நாம் கடவுளின் மக்களுக்குள் ஒருங்கிணைக்கப்படுகிறோம்.
ஆ) நாம் மீட்பையும் புது வாழ்வையும் பெறுகிறோம்.
இ) நாம் நித்திய வாழ்வுக்கான வாக்குறுதியைப் பெறுகிறோம்.
ஈ) நாம் தொடக்கப் பாவத்தில் இருந்து தூய்மையாக்கப்படுகிறோம்.

7. திருமுழுக்கின் வழமையான திருப்பணியாளராக திருநிலைப்பாடு பெற்ற ஒரு அருள்பணியாளர் (ஆயர், குரு, அல்லது திருத்தொண்டர்) இருக்கிறார். தீவிரச் சூழல்களில், எவரும், திருமுழுக்குப் பெறாதவரும் கூட திருமுழுக்கு வழங்கலாம். எவ்வாறெனினும், பொருளும் வாய்பாடும் கடைபிடிக்கப்பட வேண்டும், மேலும் அருளடையாளம் வழங்குவதன் நோக்கமும் தெளிவாக இருக்க வேண்டும்.

8. பழங்காலத் திருமுழுக்குத் தொட்டிகள் ஒரு பார்வை:

9. வயதுவந்தோர் தங்களது சொந்த விசுவாசத்தின் அடிப்படையில் திருமுழுக்கு பெறலாம். வயதுவந்த ஒருவர் திருமுழுக்கு பெறும்போது ஒரு உறுதியாளர் தேவை. குழந்தைகள் தங்களது பெற்றோரின் விசுவாசத்தின் அடிப்படையில் திருமுழுக்கு பெறலாம். ஒரு குழந்தை திருமுழுக்கு பெறும்போது ஞானப்பெற்றோர் தேவை.

10. திருமுழுக்கு ஒருவரின் ஆன்மாவில் அழியாதக் குறியைப் (முத்திரையைப்) பதிக்கிறது. “ஒருமுறை கத்தோலிக்கரானவர், எப்பொழுதும் கத்தோலிக்கரே.” ஒருவர் கத்தோலிக்கராக இருந்தாலும், விசுவாசத்தைச் செயலாக்குவதில் தவறமாட்டார் என்பது இதன் பொருளன்று.

11. தூய கத்தோலிக்கத் திருச்சபையின் மற்ற அருளடையாளங்களுக்கு ஒரு நுழைவாயிலாகத் திருமுழுக்கு இருக்கிறது.

12. திருமுழுக்கு சடங்கு:
மறைநூல் வாசித்தல்
தண்ணீருக்கு ஆசிவழங்கல்
பேயோட்டுதல்
புகுநிலையினர் எண்ணெய்யால் பூசுதல்
பாவத்தை விலக்குதல்
விசுவாச அறிக்கையிடல்
திருமுழுக்கு
கிறிஸ்மா எண்ணெய்யால் பூசுதல்
வெள்ளை துணியும் மெழுதிரியும் வழங்குதல்

13. ஒரே திருமுழுக்கை மட்டுமே கத்தோலிக்கத் திருச்சபை நம்புகிறது. சரியான பொருளும் வாய்பாடும் பயன்படுத்தி ஒருவர் திருமுழுக்கு பெற்றிருந்தால், அவர் கத்தோலிக்கம் அல்லாத வேறு குழுமத்தில் திருமுழுக்கு பெற்றிருந்தாலும், அவருக்கு மறுதிருமுழுக்கு தேவையில்லை. தெளிவில்லாத நேரங்களில், நிபந்தனைசார் திருமுழுக்கு வழங்கப்படுகிறது (திச 869 §1).

14. மீட்புக்கு திருமுழுக்கு அவசியம். எவ்வாறெனினும், கடவுள் அருளடையாளங்களோடு மீட்பைப் பிணைத்து வைத்திருந்தாலும், அவரும் அவரது இரக்கமும் அருளடையாளங்களோடு பிணைந்திருக்கவில்லை. நேர்ப்பொருளில் திருமுழுக்கு பெறாதவர்களும், வாழ்வின் சூழல்கள் அல்லது நோக்கத்தினால் “திருமுழுக்கு பெற்றவர்களாகின்றனர்” என்பதே இதன் பொருள்:

*குருதித் திருமுழுக்கு*
கிறிஸ்துவுக்காக மறைச்சாட்சிகள் ஆகிறதன் வழியாக திருமுழுக்கு பெறுகின்றவர்கள் (கதிம 1258).

*ஆசைத் திருமுழுக்கு*
திருமுழுக்கு பெற இயலாதப் புகுநிலையினரும் (கதிம 1259), நற்செய்தியை அறியாமலே தங்களின் புரிதலுக்கு ஏற்ப கடவுளின் திருவுளத்தைச் செய்கின்ற மக்களும் (கதிம 1260).

*திருமுழுக்கு பெறாதக் குழந்தைகள்*
திருமுழுக்கு பெறாமல் இறக்கின்ற குழந்தைகள் கடவுளின் இரக்கத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும் (கதிம 1261).

15. மனிதருக்கு நமது இருளில் துணையிருக்க இயேசு தாமே திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றார் (மத் 3:13-17), அவ்வாறு செய்து, பாவத்தையும் இருளையும் வென்றார். தண்ணீரால் புனிதமடைய அன்று, திருமுழுக்கு அளிக்கும் தண்ணீரைப் புனிதப்படுத்தவே அவர் திருமுழுக்கு பெற்றார்.